மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

132—

வணிக வளாகம்

*****8832—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேச்சேரி பேரூராட்சியில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், மேச்சேரி பேரூராட்சியில் பேரூராட்சிக்குச் சொந்தமாக தற்போது மொத்தம் 66 கடைகள் உள்ளன. கூடுதலாக வணிக வளாகங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, மேச்சேரி பேரூராட்சி, நெடுஞ்சாலைப் பகுதியில் அமைந்திருக்கிறது. அந்தப் பேரூராட்சி பேருந்து நிலையத்தைச் சுற்றி சுமார் 200 குக்கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமத்தில் சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் வந்துசெல்கின்றனர். அங்கே அரசுக்குச் சொந்தமான இடத்தை சில தனிநபர்கள் ஆக்கிரமிப்பு செய்து, கடைகளைக் கட்டி, உள் வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அரசு நிலங்களை கையகப்படுத்தி, அங்கே வணிக வளாகம் கட்டினால் அரசுக்கு வருவாயும், அங்கே போக்குவரத்து நெரிசலும் குறையும் என்பதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுக்குச் சொந்தமான இடத்தைக் கையகப்படுத்தி அங்கே புதிய வணிக*

2012 ஏப்ரல் 20]

வளாகம் கட்ட நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடுதலாகக் கடைகள் கட்டப்படுமா என்றுதான் கேள்வி கேட்டார். ஒரு துணைக் கேள்வியாக, தனியார்கள் கையகப்படுத்தி அங்கே உள் வாடகைக்குக் கடைகளை விட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அதுகுறித்து என்னுடைய பதிலுரையில் வரவில்லை. இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், நகராட்சி மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக, வருகிற 2012-2013 ஆம் ஆண்டில் அங்கே கூடுதலாக 25 கடைகள் கட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், அவ்வாறு அந்த நகரப் பேருந்து நிலையத்தில், ஏனென்று சொன்னால்— அதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், சேலம்-மேட்டூர் சாலையில் வருவதைப் போலவே, தருமபுரிலிருந்து மேட்டூருக்கு வருவதற்கு மையப் பகுதியாக மேச்சேரி இருக்கிறது. அப்படி யாராவது ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, மேலும் அந்தப் பேருந்து நிலையம் சிறப்பான முறையில் நடைபெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

[2012 ஏப்ரல் 20

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதிக்குட்பட்ட மிகப் பெரிய ஊராட்சியான அவலூர்பேட்டை ஊராட்சியில் கிட்டத்தட்ட ஐயாயிரத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் உள்ளனர். 15,000 பேர் வசிக்கின்றனர். சுற்றுவட்டாரங்களிலுள்ள 60 பஞ்சாயத்துகளுக்கு மையமாக உள்ள ஒரு பெரிய ஊராட்சியில், அந்த ஊராட்சிக்குண்டான வருவாயை அதிகப்படுத்தித் தரும் வகையில், அங்கே ஒரு வணிக வளாகம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வணிக வளாகம் கேட்டிருக்கிறார். அது பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட வேண்டுமா; அல்லது அந்தப் பேரூராட்சியிலே உள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் அமைக்கப்பட வேண்டுமா; அப்படிப் பேரூராட்சிக்குச் சொந்தமான இடம் இருந்து, வணிக வளாகம் கட்டி, அந்த வணிக வளாகத்திற்கு நல்ல வாடகை வரக்கூடிய ஒரு சூழல் அமைந்திருந்தால், நிச்சயமாக அங்கே ஆய்வு செய்து, நடவடிக்கை எடுத்து, வணிக வளாகம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

டாக்டர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை நகர் சற்றேறக்குறைய ஒன்றரை இலட்சம் மக்களும், எழுபதாயிரம் வாக்காளர்களும் நிறைந்திருக்கிற ஊர் ஆகும். அந்தப் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான இடம் உள்ளது. ஆகவே, மக்கள் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு வணிக வளாகம் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே ஒரு பதிலைச் சொன்னேன். அதே பதிலைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நகராட்சிக்குச் சொந்தமான இடம், ஒரு நகரின் ஒதுக்குப்புறமாக இருந்தால், அங்கே வணிக வளாகம் கட்டினால் பயன் வராது. அரசினுடைய பணம் விரயமாகும். அது நகரின் மையப் பகுதியிலோ அல்லது வியாபாரத் தலமுள்ள பகுதியிலோ இருக்கின்ற பட்சத்தில், நிச்சயமாக அந்த இடத்திலே வணிக வளாகம் கட்டப்பட்டு, அந்த நகராட்சிக்கு வருவாயை மேம்படுத்துகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் நகராட்சிக்குச் சொந்தமான மீன் அங்காடியும், காய்கறி அங்காடியும் மிகப் பழுதுபட்டதொரு நிலையிலே இருக்கின்றன. அந்த இடத்திலே, இந்த மீன் அங்காடி உட்பட ஒருங்கிணைந்த ஒரு வணிக வளாகம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. ஆனால், அங்கே ஏற்கெனவே இருக்கிற அந்த அங்காடிகளை, மாற்று ஏற்பாடுகள் செய்கின்ற அளவுக்கு வாய்ப்பு இருக்கின்ற இடம் இருந்தால், அதை மாற்றிவிட்டு, அந்த இடத்தில் புதியதாக, நல்ல முறையிலே அங்காடி கட்டி, மீண்டும் அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி தொகுதிக்குட்பட்ட புதுவயல் பேரூராட்சி, தமிழகத்திலே உணவு உற்பத்தில் முதலிடத்தில் இருக்கின்றது. அங்கே ஒரு வணிக வளாகம் கட்டித் தர வேண்டும். அதைப்போல, தேவகோட்டை நகராட்சியிலும் வணிக வளாகம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, நகராட்சிகள், மாநகராட்சிகள், பேரூராட்சிகளில் இதுபோன்ற வணிக வளாகங்கள் கட்டுவது என்பது அந்தந்த நகராட்சி, பேரூராட்சியினுடைய நிதியாதாரத்தைக் கொண்டுதான் அங்கே வணிக வளாகங்கள் கட்டப்பட வேண்டும். ஆனால், நகராட்சியினுடைய வருவாய் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக எல்லா உட்கட்டமைப்பு வசதிகளையும், அரசின் நிதியிலிருந்து செய்வதற்குரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான், இந்த நிதியாண்டில்கூட 750 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை, அங்கே வருவாய் தரக்கூடிய நிலையிலே இடங்கள் இருந்தால் நிச்சயமாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட மொரப்பூர் பகுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார். ஏறக்குறைய இரண்டு இலட்சம் மக்கள் வந்து செல்லக்கூடிய மையமான ஒரு ஊராட்சி ஒன்றியம். இதுவரை அந்த மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு

2012 ஏப்ரல் 20]

வணிக வளாகமே கிடையாது. பாலத்திற்கு அடியிலேதான் இப்போது கடை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இடமும் இருக்கிறது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் அந்தப் பகுதியிலே வணிக வளாகம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறை முதலமைச்சராக இருந்தபோதுதான் மொரப்பூர் ஊராட்சியில் புதியதாக பேருந்து நிலையத்தைக் கொடுத்தார்கள். அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டார்கள். அதைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற எல்லா நகராட்சிகளும், பேரூராட்சிகளும் எப்படி மேம்படுத்தப்பட வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருகிறார்களோ, அதைப்போலவே நம்முடைய மொரப்பூர் ஊராட்சிக்கும் சாத்தியக்கூறு இருப்பின் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை மகள், அலை மகள், மலை மகள் மூவருடைய ஆசியைப் பெற்ற ஒரே தமிழ் மகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மையப் பகுதியிலே, சிங்காரத்தோப்பிலே இருக்கின்ற யானைகுளம் என்ற இடத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக 2005 ஆம் ஆண்டில் இருந்தபோது, அங்கே ஒரு வணிக வளாகம் கட்டுவதற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரத்தால் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த யானைகுளம் வணிக வளாகத்தை, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி*

நிறைவேற்றாமல் விட்டுவிட்டது. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியில் அந்த யானைகுளம் வணிக வளாகம் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு பொருளையோ, ஒரு வேலையையோ தொட்டால், அது எந்தச் சூழ்நிலையிலும் நிச்சயமாக நிறைவேற்றக்கூடிய தொழிலாகத்தான் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆட்சியில் தொடங்கி வைத்த அந்த வணிக வளாகத்தை விரைவாகக் கட்டி முடித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களாலே துவக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளப்பட்டி கிராமத்தில் மீன் ஏல விற்பனை நிலையம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அங்கு சமீப காலமாக மீன் ஏலமே விடமுடியாத அளவிற்கு இருக்கிறது. எனவே, அந்த ஏல நிலையத்தை உள்ளாட்சித் துறையின்மூலமாக சீரமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடம் ஊராட்சிப் பகுதி என்று ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள்.

2012 ஏப்ரல் 20]

அது கிராமமாக இருக்கின்ற காரணத்தினால் நகர்ப்புறத்திற்கு வருவதில்லை. அப்படி இருந்தாலும்கூட, அது ஒரு வியாபாரத் தலமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே மீன் அங்காடிகள் வைத்து வியாபாரம் செய்யக்கூடிய மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் அதை ஆய்வு செய்து, அந்த மீன் அங்காடியில் வைத்து வியாபாரம் செய்கின்ற வியாபாரிகளுக்கும், கொண்டு வருகின்றவர்களுக்கும் உரிய வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் நகரத்தினுடைய மையப் பகுதியில் சுமார் 13 ஆயிரம் சதுர அடியில் காந்தி திருமண மண்டபம் இருந்தது. 15 ஆண்டுக் காலமாக பயன்படுத்தப்படாமல் சமூக விரோதிகள் எல்லாம் அங்கே வந்து போகக்கூடிய நிலை இருக்கிறது. அதை மாற்றி அமைத்து அதிலே வணிக வளாகம் கட்டப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காந்தி திருமண மண்டபம் இருக்கிறது என்று சொன்னார். அது வேறு யாருக்காவது வாடகைக்கு விடாதபட்சத்தில் அதை ஆய்வு செய்து அது பழுதுபட்டிருந்தால் — ஏனென்று சொன்னால் அது நல்ல நிலையில் இருந்தால் அதை இடிப்பதற்குரிய வாய்ப்பு குறைவு— அதை சீர் செய்து, அதை மற்ற பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்படும். அதேபோல மிகவும் பழுதடைந்து இருந்தால் நிச்சயமாக அதை இடித்துத் தள்ளிவிட்டு நல்ல ஒரு வணிக வளாகத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 20

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி எனது திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் ஒரு வணிக வளாகம் கட்டித் தருவதற்கு உண்டான அனைத்துத் தகுதிகளும் இருக்கின்றன. அதனால் நகராட்சிக்கும் தேவையான வருவாய் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித் தர முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. ஆனால் இடம் இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அப்படி இடம் இருந்தால், நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது பொன்னேரி தொகுதியில், பொன்னேரி பேரூராட்சியில், பேரூராட்சிக்குச் சொந்தமான நிலம் இருந்தும், 50,000 பேர் வரை கூடும் அந்த இடத்திற்கு மார்க்கெட் வசதி இல்லாமல் இருக்கின்றது. அந்த இடத்திலே ஒரு வணிக வளாகம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50,000 பேர் சேரக்கூடிய இடம் என்று சொல்கிறார். அப்படி இருக்குமேயானால், நிச்சயமாக ஆய்வு செய்து, அங்கே இடம் இருக்கின்ற பட்சத்தில், அதற்கேற்றவாறு அங்கே வணிக வளாகம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

133—

தார்ச் சாலை

***754—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி *மாவட்டம் கண்ணகி கோயிலுக்குச் செல்வதற்கு வனப் பகுதியில் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேனி *மாவட்டம், கண்ணகி கோயிலுக்குச் செல்லக்கூடிய அனுமதிக்கப்பட்ட பாதை அடர்ந்த வனப் பகுதிக்குள் சரிவான நிலப்பரப்பில் அமைந்துள்ளதாலும், இப்பகுதியில் அதிகமான வன உயிரின நடமாட்டம் உள்ள காரணத்தாலும், இப்பாதை ஆண்டு முழுவதும் பொதுமக்களால் பயன்படுத்தப்படுவதில்லை என்பதாலும், மேலும், இப்பாதையில் சித்ரா பௌர்ணமி அன்று மட்டும்தான் சுமார் 2000 முதல் 2500 பக்தர்கள் சென்று வருகிறார்கள் என்பதாலும், தமிழக வனப் பகுதியில் சாலை அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*